சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.75/2021

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் - பாலகிருஷ்ணன் (Pw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கின் வாதிகள் தரப்பு 1வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 24.09.2007ம் தேதியிட்ட என் தந்தை மாணிக்கம் அவரது தந்தை மற்றும் சகோதரர்களுடன் சேர்ந்து செய்து கொண்ட பதிவு பாகப்பிரிவினை ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1**. 27.08.2020ம் தேதியிட்ட மாணிக்கம் 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த பதிவு உயில் சாசனம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 2.** 19.02.2021ம் தேதியிட்ட என் தந்தை மாணிக்கத்தின் இறப்பு சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ 3**. 28.05.2000 ம் தேதியிட்ட தாவா சொத்துக்களுக்கான கணினி பட்டா நகல் **வா.சா.ஆ 4**. 01.03.2021ம் தேதியிட்டவாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு கை நகல் **வா.சா.ஆ 5**. 12.03.2021ம் தேதியிட்ட அஞ்சல் ஒப்புகை அட்டைகள் எண்ணம் 2 அசல் **வா.சா.ஆ 6**. 12.02.2024 ம் தேதியிட்ட ராஜமாணிக்கம் 1ம் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அசல் **வா.சா.ஆ 7**.

26.02.2024ம் தேதியிட்ட 1ம் வாதி அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ 8.** 20.07.2016ம் தேதியிட்ட என் தந்தை அருப்புக்கோட்டை டி.மு.கோர்ட்டில் தாக்கல் செய்துள்ள O.S.No.125/2016 பிராது சார்பு நகல் **வா.சா.ஆ 9**. மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் காரியாபட்டி O.S.No.20/2024 சீர்திருத்த பிராது சார்பு நகல் **வா.சா.ஆ 10**. 17.10.2023ம் தேதியிட்ட என் தந்தையின் வாரிசு சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ 11**. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.